# ஆதித்தமிழன்

நிறுவனர் இரா.அதியமான்

அறிவாயுதம்

மாதஇதழ்

AATHITHAMIZHAN ARIVAAYUTHAM

வலைதளம் : www.aathithamizharperavai.com

| தனிச்சுற்றுக்கு மட்டும் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஆனி - சூன் 10- 2014 | இதழ் - 35 | பக்கம் 4 | நன்கொடை ரூ.10 |
|---|---|---|---|---|---|



விளம்பர கட்டணம்


முழுபக்கம் - 4000

அரைபக்கம் - 2000

கால்பக்கம் - 1000

விளம்பரம் மற்றும் இதழ் தொடர்புக்கு: 9443758068


ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடும் இதழ்



நடந்த முடிந்த 2014 நாடாளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணிக்கு தேர்தல் களப்பணியாற்றிய பேரவையினரை வாழ்த்திய கலைஞர்.



நடந்த முடிந்த 2014 நாடாளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணிக்கு தேர்தல் களப்பணியாற்றிய பேரவையினரை பாராட்டிய தளபதி ஸ்டாலின்

## 2014 நாடாளுமன்ற தேர்தலில் களப்பணியாற்றிய

# பேரவையினரை பாராட்டிய தளபதி ஸ்டாலின்

*24 ஏப்ரல் 2014 அன்று நடை பெற்ற நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் திராவிட முன்னேற்ற கழக கூட்டணியை ஆதரித்து பிரசாரம் செய்வதென கடந்த 4 சனவரி 2014 அன்று நடை பெற்றபொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு ஆதித்தமிழர்பேரவை தமிழகம் முழுவதும் சிறப்பாக தேர்தல் பிரச்சார களப்பணியாற்றியது. இது அனைத்து ஊடங்களிலும் தொலைகாட்சிகளும் வெளியிட்டது. தேர்தலையொட்டி பேரவையின் இதழான ஆதித்தமிழனில் அருந்ததியருக்கு திமுக அரசு வழங்கிய 3 சதவீத உள் ஒதுக்கீடு மற்றும் தூய்மை தொழிலாளர் நலவாரியம் வழங்கியது ஒண்டிவீரன் மணிமண்டபம் அமைத்தது மற்றும் திமுக வின் சாதனைகளை அருந்ததிய மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆதித் தமிழன் சிறப்பிதழ் வெளியிட்டது.*

*இந்த இதழை திமுக தலைவர் கலைஞரும், தளபதி ஸ்டாலினும் ஆர்வத்துடன் பார்த்து பாராட்டினர்.*

*அப்போது திமுக பொருளாளர் ஸ்டாலின் கூறியது:- தேர்தலில் மற்ற இயக்கங்கள் எல்லாம் சீட்டையும் பலனையும் பார்த்து வேலை செய்தனர். ஆனால் தலித் இயக்கங்களில் நீங்கள் (ஆதித்தமிழர் பேரவையினர்) எந்த பிரதிபலன் பாராமல் திமுக கூட்டணிக்கு களப்பணியாற்றியது. கழகம் என்றும் மறக்காது பெரிமைக்குரியது என்று பாராட்டி நன்றி தெரிவித்தார்.*

*அப்போது உடன் மாநில திமுக துணைப் பொதுச்செயலாளர் துரைசாமி அவர்கள் கூறியது வெற்றிபெற்று அதிகாரத்தில் இருக்கும்போது அனைவரும் எங்களை பார்க்க வருவது சிறப்பல்ல. ஆனால் தி.மு.க. எதிர்கட்சி அந்தஸ்த்து கூட இல்லாத நிலையில் தாங்கள் எங்களை ஆதரித்ததுதான் சிறப்பு என்று பெருமிதம் கொண்டார்.*

## நிறுவனர் அதியமான் பேரவை தோழர்களுக்கு வாழ்த்து

24 ஏப்ரல் 2014 அன்று நடை பெற்றநாடாளுமன்ற மக்களவை தேர்தலில் திராவிட முன்னேற்ற கழக கூட்டணியை ஆதரித்து பிரசாரம் செய்வதென கடந்த 4 சனவரி 2014 அன்று நடை பெற்றபொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு தமிழகம் முழுவதும் சிறப்பாக தேர்தல் களப் பணியாற்றிய பேரவை தோழர் கள் அனைவருக்கும் என் நெஞ் சார்ந்த வாழ்துக்களையும் நன்றி யையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## பேரவையை வலுப்படுத்த மாவட்டம் தோறும் சீரமைப்பு பணி நடைபெற்றது

*ஆதித்தமிழர் பேரவையை வலுப்படுத்தும் நோக்கில் மாவட்டம் தோறும் சீரமைப்பு பணி நடைபெற்று வருகிறது. இந்த சீரமைப்பு குழுவில் பேரவை நிறுவனர் அதியமான் தலைமையில் பொதுச் செயலாளர் நாகராசன், நிதிச்செய லாளர் பெருமாவளவன் மற்றும் துணைப் பொதுச்செயலாளர் சந்திரன் உள்ளிட்ட தலைமைக்குவினர் மாவட்டம் தோறும் சீரமைப்பு பணியில் ஈடுபட்டு வருகின் றனர்.*

*இதில் முதல் சுற்றில் கடந்த 28 -6-2014 சேலம், 29 நாமக்கல், 30 ஈரோடு எனவும் இரண்டாவது சுற்றில் 4-7-2014 விருதுநகர், 5 மதுரை, 6 தேனி ஆகிய 6 மாவட்டங்களில் சீரமைப்பு பணி நடைபெற்றது. இதில் பேரவை நிர்வாகிகள் திரளாகவும், ஆர்வத்துடனும் பங்கேற்றனர்.*

### முதல் மற்றும் இரண்டாம் சுற்றுக்கான நிர்வகிகள் பட்டியல்

**சேலம் மாவட்டம்**

சேலம் மாவட்டத்தை மூன்றாக பிரித்து மாநகர் மாவட்டத்திற்கு லோகநாதன், கிழக்கு மாவட்டத்திற்கு செல்வக்குமார், மேற்கு மாவட்டத்திற்கு ராதாகிருஷ்ணன்,

**நாமக்கல் மாவட்டம்**

நாமக்கல் மாவட்டத்தை இரண்டு பிரித்து கிழக்கு மாவட்ட அறிவழகன், மேற்கு மாவட்டத்திற்கு தமிழரசு,

**ஈரோடு மாவட்டம்**

ஈரோடு மாவட்டத்தை மூன்றாக பிரித்து மாநகர்மாவட்டத்திற்கு அறிவழன், கிழக்கு மாவட்டத்திற்கு வீரகோபால், மேற்கு மாவட்டத்திற்கு ஆறுமுகம்,

விருதுநகர் மாவட்டத்தை இரண்டாக பிரித்து கிழக்கு மாவட்டத்திற்கு நிலுவையிலும், மேற்கு மாவட்டத்திற்கு ஈஸ்வரன்,

**மதுரை மாவட்டம்**

மதுரை மாவட்டத்தை மூன்றாக பிரித்து மாநகர் மாவட்டத்திற்கு ஆதவன், வடக்கு மாவட் டத்திற்கு விடுதலைவீரன், தெற்கு மாவட்டத்திற்கு செல்வம்,

**தேனி மாவட்டம்**

தேனி மாவட்டத்தை ஒரே மாவட்டமாக அறி வித்து அதற்கு வீரபாண்டியன் ஆகியோர் களை மேற்கண்ட மாவட்டங்களின் செயலாளராக தலைமைக்குழு நியமனம் செய்கிறது. ஏணைய மாவட்ட, நகர, ஒன்றிய, நிர்வாகிகள் பட்டியல் பின்னர் அறிவிக்கப்படும்.


குறிப்பு: பொறுப்பாளர்களாக நியமனம் செய்யப் படுகிறவர்கள்

1. நடப்பு ஆண்டிற்கான உறுப்பினர் அட்டை.
2. ஆதித்தமிழன் இதழுக்கான குறைந்த பட்சம் ஆண்டு சந்தா.
3. நியமன கடிதம் பெற்றிருக்க வேண்டும். அப்படி பெற்ற பின்பே முகவரி அட்டை (விசிட்டிங் கார்டு) கடித புத்தகம் (லெட்டர் பேட்) அச்சிட அனு மதிக்கப்படுவர். அப்படி அச்சிடுவதற்கு முன்பாக அதன் வடிவத்தை தலைமைக்குழுவின் பரிந்துரையின் பேரில் இறுதி செய்யப்படும்.

## தலைமை ஒழுங்கு நடவடிக்கை

ஆதித்தமிழர் பேரவையின் கொள்கைபரப்பு செயலாளராக இருந்து வந்த தோழர் சு.க.சங்கர் அவர்கள் பேரவையின் கட்டுப்பாட்டிற்கு எதிராக செயல்பட்ட காரணத் தினால் அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்தும், அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந் தும் நீக்கப்பட்டுள்ளார். எனவே அவரிடம் பேரவை தோழர்கள் யாரும் அமைப்பு சம்பந்தமான தொடர்புகள் வைக்க வேண்டாம் என தலைமை அறிவுறுத்துகிறது.





22-5-2014 அன்று கரூர் காவேரியம்மாள் திருமண மண்டபத்தில் மாநில சிறப்பு பொதுக்குழுவில் பேரவை நிறுவனர் அதியமான் எழுச்சி உரை.

## உச்சநீதிமன்ற உத்தரவின்படி

# வன்கொடுமை தடுப்பு சட்டத்தை தீவிரப்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும்

## தமிழக அரசை வலியுறுத்தி சேலத்தில் நடந்த பேரவை பொதுக்குழுவில் தீர்மானம்

22-5-2014 அன்று கரூர் காவேரியம்மாள் திருமண மண்டபத்தில் (உழவர்சந்தை எதிரில்) ஆதித்தமிழர் பேரவை யின் மாநில சிறப்பு பொதுக்குழு நிறுவனர் அதியமான் தலைமையில் நடைபெற்றது. அப்பொதுக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. 24 ஏப்ரல் 2014 அன்று நடைபெற்றநாடாளுமன்ற மக்களவை தேர்தலில் திராவிட முன்னேற்றகழக கூட்டணியை ஆதரித்து பிரசாரம் செய்வதென கடந்த 4 சனவரி 2014 அன்று நடைபெற்றபொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் திராவிட முன்னேற்றகழகத்திற்கு தமிழகம் முழுவதும் சிறப்பாக தேர்தல் களப்பணியாற்றிய பேரவை தோழர்கள் அனைவரையும் இந்த பொதுக்குழு பாராட்டுகிறது.

2. ஆதித்தமிழர் பேரவை கடந்த காலங்களில் சமூக மாற்றத்திற்கான களப் பணியாற்றி வந்தது. தற்போது அருந்ததியர்கள் அரசியல் அதிகார பகிர்வில் இடம்பெற வேண்டி கழக தலைவர் கலைஞர் அவர் களையும் கழக பொருளாளர் ஸ்டாலின் அவர்களையும் நேரில் சந்தித்து திராவிட முன்னேற்றகழக கூட்ட ணிக்கு பேரவையை ஆதரவு இயக்கமாக செயல்பட வைத்த நிறுவனர் அதியமான் அவர்களுக்கு இந்த பொதுக்குழு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

3. நடந்த முடிந்த நாடாளுமன்றதேர்தலில் முழு மையாக வெற்றி வாய்ப்பை திமுக கூட்டணி இழந்த போதும் ஆதித்தமிழர் பேரவை திராவிட முன்னேற் றகழகத்திற்கு ஆதரவு என்றநிலையில் மாறுபாடு இருக்காது. மேலும் எதிர் வரும் 2016 சட்டமன்ற தேர்தலிலும் திராவிட முன் னேற்ற கழக கூட்டணியில் ஆதித்தமிழர் பேரவை இடம்பெற்று வெற்றிக்கு உறுதியாக பாடுபடும் என இந்த பொதுக்குழு தீர்மானிக்கிறது.

4. அருந்ததியர் உள் இட ஒதுக்கீட்டை 6 சதவீதமாக உயர்த்திட வேண்டுமென 2013 செப்டம்பர் 26-ம் தேதியன்று உயிர்தியாகம் செய்த வழக்கறிஞரும் பேரவையின் முன்னாள் நிதிச்செயலாளர் தோழர். நீலவேந்தன் அவர்களின் தியாகத்தையும், 2013 நவம்பர் 26ம் தேதியன்று அதே கோரிக்கையை வலியுறுத்தி உயிர்தியாகம் செய்திட்ட அருந்ததியர்களின் தாய் பேரவையின் மகளிர் அணி செயலாளர் தோழர். ராணி அவர் களுக்கும் எதிர்வரும் செப்டம்பர் 26ம் தேதியன்று திருப்பூரில் மாபெரும் நினை வேந்தல் எழுச்சி கூட்டத்தை பேரவை தலைமை சார்பாக நடத்துவது என இந்த பொதுக்குழு தீர்மானிக் கிறது.

5. நடைமுறையில் உள்ள அருந்ததியர்களின் 3 சதவீத உள் இட ஒதுக்கீடு என்பது அருந்ததியர் மக்கள் தொகைக்கு போதுமானதாக இல்லை என்பதாலும் இன்றைக்கும் தூய்மை தொழிலாளர்களாகவும், செருப்பு தைப்பவர் களாகவும், விவசாய கூலிகளாகவும் நீடித்து வரும் அருந்ததியர் மக்கள் வாழ்வில் ஏற்றம் பெற்றிட 3 சதவீத உள்இடஒதுக்கீட்டை 6 சதவீதமாக உயர்த்திட வேண்டுமென இப்பொதுக்குழு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

6. தூய்மை தொழிலாளர் களின் மறுவாழ்வுக்கான கையால் மலம் அள்ளும் தடை சட்டத்தை 2014 இல் மிகத்தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென கடந்த ஏப்ரல் மாதம் உச்சநீதி மன்ற நீதியரசர் வழங்கி உள்ள உத்தரவின் மீது தமிழக அரசு சிறப்பு கவனம் செலுத்தி நடைமுறைப் படுத்திடவேண்டுமென இந்தப் பொதுக்குழு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

7. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகள் தடுப்பு சட்டம் மற்றும் அதன் விதிகளை விரிவுப் படுத்தி கடந்த மாதம் உச்சநீதி மன்றம் வெளியிட்ட உத்தரவை முழுமையாக நடைமுறைப் படுத்திட வேண்டும். வன்கொடுமை தடுப்பு சட்ட வழக்கினை விசாரிக்க அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு நீதி மன்றங்கள் அமைத்திட வேண்டுமென தமிழக அரசை இந்த பொதுக்குழு கேட்டுக் கொள் கின்றது.

8. நெல்லை மாநகரத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மாமன்னர் ஒண்டிவீரன் மணிமண்டபத்தில் அவர் குதிரையில் அமர்ந்துள்ளபடி முழு உருவ வெண்கல சிலையை நிறுவி உடனடியாக திறந்திட வேண்டு மென்றும் முதல் சாதி ஒழிப்பு சமூக நீதிபோராளி மதுரைவீரனுக்கு மதுரையில் நினைவு மணிமண்டபம் அமைக்க வேண்டு மென்றும், இந்த பொதுக் குழு தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது.

9. கடந்த ஆட்சியில் ஏற்படுத் தப்பட்ட தூய்மை தொழிலாளர் நல வாரியம் மற்றும் தோல் தொழிலாளர் நலவாரியத்தை மீண்டும் செயல்பட வைத்திட வேண்டுமென தமிழக அரசுக்கு இந்த பொதுக்குழு வேண்டு கோள்விடுக்கிறது.

எந்தவொரு ஒடுக்கப்பட்ட சமூகத்தின் குரல்வளை நசுக்கப் படும்போதும், அவர்களின் உரிமைகள் பறிக்கப்படும் போதும், ஆதித்தமிழர் பேரவை எப்போதும் அவர்களுக்கு தோள்கொடுத்து, போராட்ட களம் காண தயங் காது.

இவ்வாறு அப்பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில்

# அருந்ததியர் உள்ஒதுக்கீட்டை முறையாக நடைமுறைப்படுத்த

## ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை காமராஜர் பல்கலைக்கழக உதவி மற்றும் இணை பேராசிரியர்கள் நியமனத்தில் அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை கண்டிப்பாக நடைமுறைவேண்டும் என ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே உள்ள கல்லமநாயக்கன்பட்டியை சேர்ந்த சக்கையா ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக தொலைநிலை கல்வித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 14 உதவி பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப் பட்டது. இதில் அருந்ததியர் உள் ஒதுக்கீடு சட்டம் பின்பற்றப்படவில்லை.

இந்நிலையில் கடந்த பிப்ரவரி 11ம் தேதி காமராஜர் பல்கலைக்கழக பதிவாளர் சார்பில், நாட்டுப்புறவியல் , இளைஞர் நலன் உள் ளிட்ட துறைகளில் 27 உதவிப்பேராசி ரியர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறி விப்பு வெளியிடப்பட்டிருந்தது. இதன்படி மே மாதம் 27,28 தேதிகளில் இதற்கான நேர்முகத் தேர்வு நடந்தது. அதில் அருந்ததியர் பிரிவின் கீழ் பலர் கலந்து கொண்டனர். ஆனால் அவர்களுக்கு தகுதியில்லை எனக்கூறி இதர பிரிவினரை மட்டும் நியமனம் செய்ய திட்டமிட்டுள்ளனர் எனவே இதற்கு தடை விதித்து அருந்ததியர் உள் ஒதுக்கீடு முறையை பின்பற்ற வேண்டும் என மனுவில் கூறியிருந்தார்.

இதே நடைமுறையை இணை பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதிலும் பின்பற்றவேண்டும் என மனுவில் கூறியிருந்தார். இந்த மனுக்கள் நீதிபதிகள் வி.ராமசுப்பிரமணியம், வி.எம்.வேலுமணி ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தன. அப்போது மதுரை காமராஜர் பல்கலைக்கழகதில் உதவி பேராசிரியர்கள் மற்றும் இணை பேராசிரியர்கள் நியமனத்தில் தமிழக அரசின் 2009 ஆண்டு அருந்ததியர் உள் ஒதுக்கீடு சட்டத்தை கண்டிப்பான முறையில் பின்பற்றபட வேண்டும் என நீதிபதிகள் உத்தர விட்டனர்.



நெல்லையில் அதிக 10, 12ம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பேரவை நிறுவனர் அதியமான் பாராட்டு சான்றிதழ் வழங்கினார். உடன் பொதுச்செயலாளர் நாகராசன் . மாவட்ட செயலாளர் கலைக்கண்ணன் மற்றும் பேரவை தோழர்கள் கலந்து கொண்டனர்.

### சிந்தனைக்கு

## வரலாறு திரும்புகிறது

இத்தனை ஆண்டுகள் அடிமையாக கிடந்த சமூகம் இன்று வரலாறு பேசுகிறது என்ற பொறாமை குணத்தில் முகநூலில் இன்று பலர் தெலுங்கு என்ற ஆயுதத்தை எடுக்கிறார்கள். நல்லதுதான் ஏன் என்றால் இத்தனை ஆண்டுகள் அருந்ததியர் யார்? என்று தெரியாமல் இருந்தவர்கள் இன்று இந்த மக்களை பற்றி பேச ஆரம்பித்துள்ளார்கள்.

இத்தனை ஆண்டுகள் எந்த வர லாற்று ஆசிரியர்களும் இந்த மக்களை பற்றி பேசவுமில்லை எழுதவுமில்லை ஆனால் இன்று பேசவும், எழுதவும் ஆரம்பித் துள்ளீர்கள் நல்லதுதான். எங்களை பற்றி தொடர்ந்து விமர்சித்து கொண்டே இருங்கள். இந்த பகடை வம்ச மக்கள் தன்னுடைய உண்மையான வரலாறு பேச ஆரம்பித்தால் உண்மையாலும் இங்கு நான் தான் தமிழன் என்று கூறிக்கொண்டு இருக்கும் சாதிகளுக்கு மிகப்பெரிய இழப்பு ஏற்பட போகின்றது.



### மதுரை மாநகர செயலாளர் தந்தை மரணம்

## பேரவை சார்பில் பொதுச்செயலாளர் வீரவணக்கம்

மதுரை மாநகர செயலாளர் ஆதவன் தந்தை உடல் நலக்குறைவால் 1-7-2014 அன்று மரணமடைந்தார். மதுரை கபிர் நகரில் உள்ள அவரது இல்லத்திற்கு சென்று பேரவை சார்பாக பொதுச் செயலாளர் நாகராசன் , அமைப்புச் செயலாளர் விடுதலை வீரன், மாவட்ட செயலாளர் செல்வம், தலைவர் கார்த்திக் மற்றும் ஏராளமான பேரவை தோழர்கள் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினார்கள்.

தீண்டாமை வன்கொடுமை செய்திகள்

# உ.பி.யை போன்று தமிழகத்திலும் பாலியல் வன்கொடுமை 10 வயது சிறுமியை 5 பேர் கும்பல் சீரழித்த கொடூரம்


## குற்றவாளிகள் தண்டனையின்றி சுதந்திரமாக நடமாட்டம்

## அரசு ஆதிக்க சாதிகளின் உயிரை மதிக்கிறது தலித்களின் உயிரை மிதிக்கிறது

27-5-2014 அன்று உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த தலித் சிறுமிகள் 2 பேரை பாலியல் வன் கொடுமைக்கு உள்ளாக்கி படுகொலை செய்த செய்தி நாட்டையே உலக்கியது. அதை தொடர்ந்து தமிழகத்திலும் உ.பி.யை போன்று

சேலம் மாவட்டம் வாழப் பாடி அருகே சென்றாயன் பாளையத்தில் கடந்த பிப்ரவரி மாதம் 10 வயது சிறுமியை 5 பேர் கொண்ட கும்பல் பாலியல் பலாத்காரம் செய்து கொன்று மரத்தில் கயிறு கட்டி தொங்க விட் டுள்ளனர் மனித மிருகங்கள்.

இந்த கோரத்தை செய்த ஈன பிறவிகள் 5 பேரும் இப்போது ஊருக்குள் ஜாலியாக உலா வருகிறார்கள். இச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட குடும்பம் அந்த ஊரில் வாழ முடியாமல் அவமானப்பட்டு வெளியேறி சேலம் ஆத்தூர் அருகே வாழ்கின்றனர். பணத்திற்காக எத்தனையோ வழக்குகளில் பொய் சாட்சிகளை தயார் செய்து நிரபராதிகளை சிறையில் தள்ளும் காவல்துறைஅதே பணத்திற்காக ஊரின் நடுவே நடந்த இந்த கொரத்திற்காக யாரும் சாட்சி சொல்ல வரவில்லை என்று காரணம் கூறி 3 மாதங்கள் ஆகியும் அந்த 5 பேருக்கு எதிராக குற்ற பத்திரிகை தாக்கல் செய்யவில்லை. அதையே காரணம் காட்டி அந்த ஈனப்பிறபி 5 பேரும் நீதிமன்றத்தில் ஜாமீன் வாங்கி விட்டார்கள்.



உ.பி.யில் 2 தலித் சிறுமிகள் பாலியல் வன்கொடுமை செய்து மரத்தில் தூக்கில் தொங்கவிட்ட கொடுமை









சேலத்தில் பாலியல் வன்கொடுமையால் இறந்த 10 வயது சிறுமியும் பாலியல் வன்கொடுமை செய்த 3 மனித மிருகங்கள்.

காவல்துறைமனசாட்சியுடன் முயற்சி செய்திருந்தால் நிச்சயம் சாட்சிகளோடு குற்ற வாளி களுக்கு தண்டனை வாங்கி தர முடியும் ஆனால் காவல்துறை அப்படி செய்ய வில்லை காணரம்? கொலை செய்யப்பட்ட சிறுமி பூங் கொடி வேறு சமூகம், குற்ற வாளிகள் வேறு சமூகம் அதில் முக்கிய குற்றவாளியான பூபதி பாட்டாளி மக்கள் கட்சியின் 13-வது வார்டு கவுன்சிலர் , ஊருக்குள் கந்து வட்டி தொழில் செய்பவர் ஊரின் தாதா பணவசதி உள் ளவர். இதனால் தண்டனை யிலிருந்து தப்பித்து கொள்கிறார்கள். இத்தனை கொடு மைக்கு பின்னும் வாங்கிய கடனை திருப்பி செலுத்த வேண்டும் என்கிற நேர்மை யோடு வட்டி கட்டும் அந்த ஏழை குடும்பம் நீதி கிடைக்க வேண்டும்.

ஒரு சிறு பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்து விட்டு, பணத்தையும், அதிகாரத்தையும் கொண்டு சிறு தண்டனை கூட இல்லாமல் தப்பிக்க முடியும் என்றநிலை இருக்கு மானால், இந்த நாட்டில் நாளை எதுவும் நடக்கலாம். இதை கண்டும் காணாமல் விட்டு விட்டால் நாளை நம் குடும்பத் திலும் நடக்க வாய்ப்புண்டு. நம் நாட்டில் ஏழைகளுக்கெல்லாம் இருக்கும் ஒரே சொத்து அரசின் மீது வைத்திருக்கும் நம்பிக்கை மட்டுமே அந்த நம்பிக்கை பொய்த்துவிடக் கூடாது. தொடர்ந்து தலித் பெண்கள் இதுபோன்ற பாலியல் வன் கொடுமைக்கு ஆளாகி வருகிறார் கள் குற்றவாளிகளை தண்டிக்கா மல் மத்திய - மாநில அரசுகள் வேடிக்கை பார்கிறது. ஆதிக்க சாதிகளின் உயிரை மதிக்கிறது. தலித் சமூகத்தினரின் உயிரை மிதிக்கிறது.

இதை கண்டித்து அனைத்து தலித் சமூக இயக்கங்களும், பெண்கள் இயக்கங்களும் ஒருங்கிணைந்து போராடினால் மட்டுமே சாத்தியமாகும் என்பதே பேரவையின் கருத்து.

# திருப்பூரில் ஜெயிலை போன்று தீண்டாமை சுவர் இடிந்து விழுந்து தாய் பலி: குழந்தைகள் படுகாயம்

## தீண்டாமை சுவர்களை அகற்றும்படி ஆதித்தமிழர் பேரவை சார்பில் மாவட்ட செயலாளர் தமிழ்வேந்தன் ஆட்சியரிடம் மனு

திருப்பூர் மாவட்டம் அவிநாசி வட்டம் திருமுருகன் நகர பஞ்சாயத்து 13-வது வார்டுக்கு உட்பட்ட அருந்ததியர்கள் வசிக்கும் பகுதி மண்ணுக்குட்டையில் தீண்டமை சுவர் இடிந்து விழுந்து ராமாத்தாள் என்ற பெண் பலியானார். இவரது 3 குழந்தைகள் படுகாயமடைந்து உயிர் தப்பினர்.

இவர்களுக்கு உரிய நிவாரணம் 10 லட்சம் வழங்கியும் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்க வேண்டும் என்றும், திருப்பூர் மாவட்டத்தில் தலித் மக்கள் குடியிருப்புகளைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள தீண்டாமை சுவர்களை அகற்றும்படியும், ஆதித்தமிழர் பேரவை சார்பில் மாவட்ட செயலாளர் தமிழ் வேந்தன் மாவட்ட ஆட்சியிர் கோவிந்த ராஜிடம் கோரிக்கை மனு கொடுத் துள்ளார் அதன் விவரம்:-

சிறைச்சாலைகளில் கைதிகள் தப்பி விடாமல் இருப்பதற்காக 15 அடி உயர தடுப்புச்சுவர் கட்டியிருப்பது போல திருப்பூர் மாவட்டத்தில் பல இடங்களில் தலித் மக்கள் குடியிருப்புகளில் சுற்றிலும் தடுப்பு சுவர்களை எழுப்பி வைத்துள்ளனர். குறிப்பாக திருமுருகன் பூண்டி பேரூராட்சி மண்ணுக்குட்டை பகுதியில் அண் மையில் பெய்த கனமழையில் குடியிருப்பைச் சுற்றி கட்டப்பட்டிருந்த தடுப்பு சுவர் இடிந்து விழுந்ததில் ராமாத்தாள் என்ற பெண் பலியானார். குழந்தைகள் இருவர் உயிர் தப்பினர்.

அதேபோல் திருப்பூர் மாநகராட்சி கண்ட மேடு பகுதியில் சுமார் 500 வீடுகள் கொண்ட தலித் மக்கள் குடியிருப்பு உள்ளது இங்கு 1500க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின் றனர். இந்த குடியிருப்பை சுற்றிலும் சிறைச் சாலை போன்று தடுப்புசுவர்கள் கட்டப்பட் டுள்ளன. இதேபோல் அம்மாபாளையம் , வாரணாசி திரையரங்கம், பெரிச்சிபாளையம் இதேபோல் திருப்பூரில் பல இடங்களில் இதுபோன்ற தீண்டாமை தடுப்பு சுவர்கள் கட்டியுள்ளனர் இதை உடனே அகற்றமாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆதித் தமிழர் பேரவை சார்பாக கேட்டுக்கொள் கிறோம். இவ்வாறு அவ் மனுவில் தெரிவித் துள்ளார்.



தீண்டாமை சுவர் இடிந்து விழுந்து தங்க வீடின்றி தவிக்கும் குடும்பத்திற்கு பேரவையின் மாவட்ட செயலாளர் தமிழ்வேந்தன் பார்வையிட்டு ஆறுதல்.



தீண்டாமை சுவர் இடிந்து விழுந்து படுகாயத்துடன் தாயை இழந்து பரிதவிக்கும் குழந்தைகள்

# சீனா பட்டாசால் இந்தியாவுக்கே ஆபத்து?

## பாதுகாப்பு இயக்க பொதுச்செயலாளர் முத்துக்கிருஷ்ணன் பகிர் தகவல்

தமிழகதின் குட்டி ஜப்பான் என்று சொல்லும் சிவகாசி தொழிலுக்கு ஆபத்து? அதுமட்டுமல்ல சீனா பட்டாசால் இந்தியாவுக்கே ஆபத்து ஏற் படும் என்று பாதுகாப்பு உறுப்பினரும், ஆதித்தமிழ பேரவையின் மாநில செயற்குழு உறுப்பினர் முத்துக் கிருஷ்ணன் ஆதித்தமிழர் இதழுக்கு பேட்டியளித்தார் அதில் கூறியது:-

நான்காம் தர உற்பத்திகளைக் கொட்டி உலகத்தையே கபளீகரம் செய்து கொண்டிருக்கிறது சீனா. இந்தியாவும் விதிவிலக்கு இல்லை. 50 பைசா சாக்லெட் முதல் 500 ரூபாய் மொபைல் வரை. எல்லாவற்றிலும் சீனமயம். இந்தியத்தொழில்துறையின் வேரை அசைத்துப் பார்க்கும் சீனா இப்போது கண் வைத்திருப்பது குட்டி ஜப்பான் என்று சொல்லக்கூடிய சிவகாசியின் மீது. விசயத்துக்கு வருவோம்.

இந்தியாவின் 90 சதவீதம் பட்டாசு சிவகாசியில்தான் உற்பத்தியாகிறது. விருதுநகரைச் சுற்றி சிறிதும் பெரிதுமாக 780 பட்டாசுத்தொழிற்சாலைகள் செயல் படுகின்றன. ஆண்டுக்கு ரூ.3000 கோடி மதிப்பிலான பட்டாசுகள் இங்குதான் தயாராகின்றன.

சிவகாசியில் பொட்டாசியம் நைட் ரேட், அலுமினியம் பவுடர், காப்பர் போன்ற ரசாயனங்களை மட்டுமே பயன்படுத்தி பட்டாசு தயாரிக்கிறாங்க, இந்த ரசாயனங்கள் பாதுகாப்பானவை. தீ பட்டால் மட்டுமே வெடிக்கக் கூடி யவை. இதோட விலையும் அதிகம். 125 டெசிபல் அளவுக்கு சத்தம் கிளப்பக் கூடிய, காதுகளை சேதமாக்காத பட் டாசுகள் மட்டுமே இங்கே தயாராகுது, சீனாவில் நிலைமையே வேற. லாபம் மட்டும்தான்அவங்க இலக்கு. பொட் டாசியம் குளோரேட், பெரிகுளோ ரேட், சல்பர்னு அதிக வீரியமுள்ள ரசாயனங்களைப் பயன்படுத்துறாங்க. இந்த ரசாயனங் களோட விலை ரொம்ப மலிவு. சத்தம், கிளாரிட்டி, புகை எல்லாம் அதிகமாக இருக்கும். லேசா கீழே போட்டாலே வெடிச்சு ஆபத்தை விளைவிக்க கூடியது. இந்தியாவில் இந்த ரசாயனங்களைப் பயன்படுத்த தடை விதிச்சிருக்காங்க. சீனா பட்டாசும் இறக்குமதி செய்ய தடை செய்யப்பட்ட பொருட்கள் பட்டியல்ல இருக்கு. ஆனா, பொம்மை கள், எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள்னு கண்டெய்லர் மேல லேபிளை ஒட்டி அதிகாரிகளை சரிகட்டி இறக்குமதி பண்ணியிருக்காங்க என்கிறார் இந்த விவகாரத்தை நீதிமன்றத்துக்கு எடுத்துக்சென்றுள்ள தமிழ்நாடு பட்டாசுத்தொழில், தொழிலாளர் பாதுகாப்பு இயக்கத்தின் பொதுச் செயலாரும், ஆதித்தமிழர் பேரவையின் செயற்குழு உறுப்பினருமான முத்துக்கிருஷ்ணன்.

கடந்த வருடம் மட்டும் 600 கண்டெய்னர் சீனப் பட்டாசுகள் இந்தியாவுக்குள் வந்திருப்பதாக சொல் கிறார் முத்துக்கிருஷ்ணன். இவற்றின் மதிப்பு சுமார் 250 கோடி ரூபாய். இந்த இறக்குமதியால் சிவகாசிக்கு மட்டும் பாதிப்பல்லை. ஒட்டு மொத்த இந்தியாவுக்கே பாதிப்பு. பொட் டாசியம் குளோரேட், பெர்குளோரேட் எல்லாம் வெடிகுண்டுகளுக்குப் பயன்படுத்தற ரசாயனங்கள். இந்தியா வில் இதையெல்லாம் எளிதா வாங்க முடியாது. ஆனா, 2 ஆயிரம் ரூபாய்க்கு சீனப்பட்டாசு வாங்கினால் போதும்... வெடிகுண்டு தயாரிக்கிற அளவுக்கு ரசாயனங்கள் கிடைச்சிடும் இந்த விபரீதத்தை உணராத அதிகாரிகள் இறக்குமதிக்கு துணை போறதுதன் வேதனை. இந்த இயக்கத் தலைவர் ராஜா. இதை தடுக்காவிட்டால் சிவாகாசி தொழிலுக்கு ஆபத்துதான். என்று சமூக ஆர்வலர்களும் கூறுகிறார்கள்.

## சிந்தனைக்கு...

### அம்மி மிதித்து அருந்ததி பார்த்து ஏன் மணவிழாவில் சொல்லப்படுகிறது?

திருமணத்தின்போது மணமக்களை அம்மி மிதித்து அருந்ததி பார் என்ற சொல் வழக்கத்தில் உள்ளது. அதன் பொருள் என்ன?

உண்மையில் அப்படி அருந்ததி நட்சத்திரம் என்பது ஒன்றுமில்லை. அருந்ததியர்களை போல வாழவேண்டும் என்பது தான் அதன் பொருள்! அருந்ததியர்கள் அரசகர்களாக இருந்துள்ளனர் இதன் சான்றுகளும் உள்ளன. உதாரணம் தருமபுரியை ஆண்ட அதியமான் நெடு மான் அஞ்சி, ஒண்டிவீரன், மதுரைவீரன், குயிலி போன்றோர்.

இப்பட்ட அருந்ததிய சமூகத்தை பொறுத்துக் கொள்முடியாத உயர் சாதியினர் அடிமை யாக்கி சீரழித்து சின்னா பின்னம் ஆக்கி விட்டார்கள். இன்று அச்சமூகம் பிழைக்க வழி இன்றி இழி தொழில் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். இதேபோலத்தான் காந்தியடி களும் தாழ்த்தப்பட்ட மக்களை அரிஜன் என்று கூறினார். (அரிஜன் என்றால் கடவுளின் குழந்தைகள் என்று பொருள்) இது வெறும் வார்த்தையாகவே மட்டுமே உள்ளது. இன்று அம்மக்களை கோயிலுக்குள் செல்ல உயர் சாதியினர் அனுமதிப்பதில்லை.




மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் நடந்த முறைகேட்டை கண்டித்தும், அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை நடை முறைப்படுத்தக் கோரியும் மதுரை அண்ணாபஸ்நிலையத்தில் பேரவை நிறுவனர் அதியமான் தலைமையில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டம்.

## அருந்ததியருக்கான இட ஒதுக்கீட்டில் யார் குறுக்கிட்டாலும்

# கொதித்தெழுவோம் அதியமான் ஆவேசம்

### அருந்ததியர்களின் உரிமைக்கு சகோதர சாதிகள் துணையாக இருக்க வேண்டும்

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் நடக்கும் முறைகேடுகளை கண்டித்தும், உள் இட ஒதுக் கீட்டை முறையாக நடை முறைப்படுத்த கோரியும், வன்கொடுமை தடுப்பு சட்டத்தை தீவிரப்படுத்தகோரியும் மதுரை அண்ணா பேருந்து நிலையத்தில் ஆதித்தமிழர்பேரவை நிறுவனர் அதியமான் கண்டன உரையாற்றினார் கண்டன உரையில்:-

இவர்கள் திருந்துவார்கள் என்று நினைத்தோம் ஆனால் இவர்கள் திருந்தவே மாட்டார்கள் அதனால் தான் காமராஜர் பல்லைக்கழகத்தை கண்டித்து முதல் கட்டமாக ஆர்ப் பாட்டம் நடைபெற்று கொண்டி ருக்கிறது. காமராஜர் பல்கலைக் கழகம் தொடர்ந்து அருந்ததியர் களை வஞ்சித்து வருகிறது. உயர்நீதிமன்ற தீர்ப்பின் படி 7 உதவி பேராசிரியர் பணியிடங்களை உரிய தகுதி யுடைய அருந்ததியர்களுக்கே இட ஒதுக்கீட் டின் அடிப்படையில் வழங்க வேண்டும். அப்படி வழங்காவிட்டால் நாங்கள் தொடர்ந்து போராடுவோம்.

இந்த காமராஜர் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருப்பது வேறு யாரு மில்லை, நாவலர் நெஞ்செழியன் அவர்களின் மருமகள் கல்யாணி மதிவாணன் அவர்கள் தான். எனவே யார்? என்ன செய்துவிட முடியும் என்று நினைத்து அருந்த தியர்களுக்கு வழங்க வேண்டிய இடத்தை பணத்திற்காக மற்ற சமூகத்தினருக்கு வழங்கி கொண்டி ருக்கிறார்கள். கடந்த 25 ஆண்டுகாலம் அருந்ததியர்களுகாக போராடி வரும் ஆதித்தமிழர்பேரவை 3 சதவீத உள் இட ஒதுக் கீட்டிற்காக கடந்த 6 ஆண்டுகாலம் போராடியதன் விளைவாக. முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் 3 சதவீத இட ஒதுக்கீட்டை இந்த மக்களுக்கு வழங்கினார். ஆனால் இந்த இட ஒதுக்கீட்டை எந்த பல்கலைக்கழகமும் முறையாக நடைமுறைப்படுத்த வில்லை. அருந்ததியருக்கான இட ஒதுக்கீட்டில் எஸ்.சி. என்று கூறிக் கொண்டு பறையர்-பள்ளர் சமூகத்தை சேர்ந்த வர்கள் தான் தட்டி பறித்துக்கொள் கிறார்கள்.

மதுரை காமராஜர் பல்லைக் கழகம் கொடுத்த காலிபணியிட விளம் பரத்தில் எஸ்.சி என்று போட்டு இரண்டு நட்சத்திர கூறியிடு போட்டு உள்ளார்கள். இவர்கள் எப்படி விளம்பரம் கொடுக்க வேண்டும். எஸ்.சி. (ஏ) என்று தான் கொடுக்க வேண்டும். எனவே இவர்கள் திட்ட மிட்டு இவர்களுக்கு கொடுக்க கூடாது என்று இப்படி விளம்பரம் கொடுத்து உள்ளார்கள்.

இந்த காமராஜர் பல்கலைக் கழத்தை கிருஷ்ணசாமியும், பள்ளர் சமூகத்தினரும் குத்தகை எடுத்துக் கொண்டார்களா? இதே நிலை தொடருமேயானால் இந்த பல்கலை கழத்தில் யாரும் உள்ளே நுழைய விடாதபடி போராட்டம் தொடரும். இவர்கள் என்ன செய்து விடுவார்கள் என்ன செய்ய முடியும்? என்று நினைத்துக்கொண்டி ருக்கிறார்கள்.

இதேபோன்று கோவை பாரதி யார் பல்கலைக்கழத்தில் 27 உதவி பேராசிரியர் பணியிடங்களை கவுண் டர்கள் மட்டுமே நியமனம் செய்து அனைத்து இடத்தையுமே இந்த கவுண்டர்கள் ஆக்கிரமித்து கொண் டார்கள் என்ன கொடுமை இது. இதேபோன்று சென்னை பல்கலைக் கழகத்திலும் கொடுத்த விளம்பரத்தில் எஸ்.சி.ஏ என்று போட்டு (டபிள்யூ) என்று போட்டு விளம்பரம் கொடுத் துள்ளனர். டபிள்யூ என்றால் உமன் (பெண்) என்று அர்த்தம் இவர்கள் நினைத் தார்கள். இதில் அருந்ததி யர்கள் யாரும் வரமாட்டார்கள் என்று? ஆனால் நிலைமை மாறி அருந்ததியர் மக்களில் பெண்கள்தான் அதிகம் படித்துள்ளார்கள் எனவே அனைத்து இடத்தையும் அருந்ததியர் பெண்கள் தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு இன்று உயர்ந்த நிலைக்கு உள்ளனர்.

அதேபோன்று வன்கொடுமை தடுப்பு சட்டத்தை அறவே நீக்க வேண்டும் என்று கூறி வருகிறார்கள். இதற்கு முன் வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று கூறினார்கள். ஆனால் இப்போது இந்த சட்டத்தையே அறவே நீக்க வேண்டும் என்று இந்த பாட்டாளி மக்கள் கட்சியின் வழக்கறிஞர் பிரிவை சேர்ந்த பாலு என்பவர் தான் வேறு ஒரு துணை அமைப்பின் மூலமாக வழக்கு போட்டுள்ளார். இந்த வழக்கை ஆரம்ப நிலையே தள்ளுபடி செய்திருக்கவேண்டும் அரசு. ஆனால் இந்த வழக்குக்கு அட்மிஷன் கிடைத் திருக்கிறது. இதற்கு விளக்கம் கேட்டு தமிழக அரசுக்கு நோட்டீசு அனுப்பியுள்ளது. வன் கொடுமையின் கீழ் ஆண் டுக்கு 7அரை லட்சம் வழக்கு கள் பதிவு செய்யப்படுகிறது. இதில் 1500 வழக்குகள் மட்டுமே பதிவு செய்கிறார்கள் ஆனால் இதில் யாரும் தண்டிக்கபடுவதுமில்லை. உத்திர பிரதேசத்தில் வன்கொடுமையால் தாழ்த்தப்பட்ட 2 சிறுமிகள் பாலி யன் வன்கொடு மைக்கு ஆளாக்கி இரண்டு பேரை மரத்தில் தூக்கில் தொங்கவிட்டுள்ளனர். இதை கண்டிக் காத உத்தர பிரதேச முதல் வர் அகிலேஷ்யாதவ். சேனை கள் என்று சொல்லி கொண்டு கையில் வாலும் துப்பாக்கியும் வைத்துக்கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்கிக் கொண்டு இருக்கி றார்கள் கையா லாகதவர்கள். இதே நிலை யைத் தான் தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி யினர் செய்து கொண்டிருக் கிறார்கள்.


மதுரையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில்
பேரவை நிறுவனர் அதியமான் கண்டன உரை.

இதேபோன்று தமிழகத் தில் விழுப்புரம் மாவட்டம் இருந்தை கிராமத்தை சேர்ந்த 7வயது சிறுமியை கிறிஸ்தவ பறையர் சமூகத்தை சேர்ந்தவர் பாலி யல் வன்கொடுமை செய்து கொலை செய்துள்ளார்.

கோவை மாவட்டம் பொள்ளாட்சியிலும் 10 வயது சிறுமி இதே கொடுமைக்கு ஆளாகி உள்ளார். மதுரை மதிச்சியம் காவல்நிலையத் தில் ஊன முற்ற இரண்டு கால் களையும் இழந்த அண்ணா துரையை திருடிக்கொண்டு ஓடியதாக பொய் வழக்கு பதிவு செய்து அடித்து துன்பு றுத்தி தூக்கில் தொங்க விட்டுள்ளனர்.

இவர்கள் என்ன பாவம் செய்தார்கள். இவர்களை தட்டிக்கேட்க யார் வருவார் கள் என்றுதான் இப்படி செய் கிறார்கள். இந்த கொடுமை களை எல்லாம் மத்தியில் ஆளும் மோடி அரசும், தமிழ கத்தில் ஜெயலலிதா அரசும் தட்டிக் கேட்மார்கள். நாம் தான் மக்களை திரட்டி போராடி இதற்கு முடிவு கட்ட வேண்டும் என கண்டன உரை நிகழ்த்தினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பேரவையின் பொதுச்செயலாளர் நாகராசன், நிதிச்செய லாளர் பெருமாவளவன், அமைப்புச் செய லாளர் விடுதலைவீரன், தலைமைநிலைய செயலாளர் வீரவேந்தன், மாவட்ட செயலாளர் செல்வம், மாவட்ட தலைவர் கார்த்திக், மாநகர செயலாளர் ஆதவன் மற்றும் விருதுநகர், தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட தோழர்கள் பெண்கள் ஏராள மானோர் கலந்து கொண்டனர்.

Printed: Publisher and Editor R.Athiyamaan, No.713, Mettupalayam salai, R.S.Puram, Coimbatore-2. Mobile: 94430 84642.
Meenakshe Offset Printers, 7, Sonaiyar Koil Street, 4th P.T.R. Road, Madurai-625 002. Off: 0425-2524731, Cell: 75981 94731

வெளிடுபவர்: இரா.அதியமான், 713, மேட்டுப்பாளையம் சாலை, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்-2. கைபேசி: 94430 84642
அச்சிடுவோர்: மீனாட்சி ஆப்செட் பிரிண்டர்ஸ், 7 சோணையர்கோவில்தெரு, 4-வது பி.டி.ஆர்.சாலை, மதுரை-2. தொலைபேசி: 0452-2524731
மின் அஞ்சல் தொடர்புக்கு : adhiyamaanperavai@gmail.com பேரவை செய்திகளை பார்க்க வலைதளம் :www.aathithamizharperavai.com